LAW & SOCIETY TRUST

# புதிய சட்டங்கள் மற்றும் நிறைவேற்று தீர்மானங்களின் இற்றைப்படுத்தல்.

## - மே 2026 -


10th May 2026

LAW TRACKER

# புதிய சட்டங்கள் மற்றும் நிறைவேற்றுத் தீர்மானங்கள் - மே 2026

*சுருக்கம் | 10 மே 2026*

### இலங்கையின் சட்டவாக்கச் செயன்முறை




## மே 2026 இன் இற்றைப்படுத்தல்கள்

## I. வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டமூலங்கள்

- **2026 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி (நீக்கல்) சட்டமூலம்** (2026 மே 15 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) —பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி அலுவலகம் மற்றும் தொடர்புடைய குழு ஆகியவற்றை இல்லாதொழித்து, 2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி சட்டத்தை முழுமையாக நீக்குகின்றது. நிலைமாறுகால ஆயத்தங்களுக்கு ஏற்பாடு செய்கின்றது: ஆளணியினரை அவர்களுக்கு உரிய சேவைகளுக்கு மீளக் குறித்தளித்தல், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளைப் பாதுகாப்பு அமைச்சிற்கு மாற்றுதல், நிலுவையிலுள்ள சட்ட நடவடிக்கைமுறைகளைத் தொடர்தல், மற்றும் நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அனைத்து ஒழுங்குவிதிகளையும் இல்லாதொழித்தல்.

## II. சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலங்கள்

- **2026 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சேர்பெறுமதி வரி (திருத்த) சட்டமூலம்** — 2026 ஜுலை 1 ஆம் திகதியிலிருந்து, வதிவுள்ளவரல்லாத ஆட்களினால் இலத்திரனியல் தளங்களில் வழங்கப்படும் எண்ணிம சேவைகளை சேர்பெறுமதி வரிச் சட்டகத்தினுள் கொண்டு வருகின்றது, சேர்பெறுமதி வரிப் பதிவின் தொடக்கநிலையைக் குறைக்கின்றது, நிதிச் சேவைகள் மீதான சேர்பெறுமதி வரி வீதத்தை 18% இலிருந்து 20.5% ஆகக் குறைக்கின்றது, மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஆட்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட விற்பனை முனைப் பொறிகளினைக் கட்டாயமாக்குகின்றது. வரி ஏய்ப்பு மற்றும் மோசடியான மீளளிப்பு உரிமைகோரல்கள் என்பவற்றிற்கான தண்டங்களை அதிகரிக்கின்றது, குற்றவியல் வழக்கு நடவடிக்கை ஏற்பாடுகளை நீட்டிப்புச் செய்கின்றது, பதிவுசெய்யப்பட்ட வரி செலுத்துநர்களின் தகவல்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்துவதற்கு ஆணையாளர் நாயகத்திற்கு வலுவூட்டுகின்றது, அத்துடன் உள்ளீட்டு வரிக் கடன்கள், பதிவேடுகளைப் பேணுதல், மற்றும் மீளளிப்புகள் என்பவற்றின் மீதான விதிகளைத் தெளிவுபடுத்துகின்றது,
- **2026 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம்** — உரிமமளிக்கப்பட்ட இயக்குநர்களுக்கு மட்டுமன்றி, அனைத்துத் தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுக்கும் அறவீட்டை விரிவுபடுத்துகின்றது. அறவீட்டினை, இராஜதந்திர விலக்களிப்பு ஒன்றுடன், தொலைத்தொடர்பு சேவைகள் வழங்கலின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டதாக மீள வரையறை செய்வதற்காக அறவீட்டு ஏற்பாட்டினை நீக்கி அதனைப் பதிலீடு செய்வதுடன், 2022 ஜுன் 4 ஆம் திகதியிலிருந்து காலப்பகுதி மற்றும் சேவை வகையின் அடிப்படையிலான வீத அட்டவணை ஒன்றினை 15% இலிருந்து அறிமுகம் செய்கின்றது. மீட்கப்பட்ட தொகைகளை சேகரிப்புக் காலப்பகுதிக்கான அறவீட்டில் உள்ளடக்குவதுடன், அறவிடப்படமுடியாத தனிசை அறவீட்டுக் கொடுப்பனவுகளிலிருந்து கழிப்பதற்கு அனுமதிக்கின்றது மற்றும் 'வழங்குநர்' என்பதற்கான புதிய வரைவிலக்கணம் ஒன்றினையும் அறிமுகம் செய்கின்றது.

- **2026 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க நிதித் (திருத்தச்) சட்டமூலம்** — வலையமைப்பு விரிவாக்கத்திற்கு சலுகை வழங்குவதற்கான ஒரு வரவுசெலவுத்திட்ட முன்மொழிவை நடைமுறைப்படுத்தும் வகையில், 2026 சனவரி 1 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் வணிகத் தொழிற்பாடுகளை ஆரம்பிக்கும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட செல்லிடத் தொலைபேசிக் கோபுரங்களுக்கு, அவை ஆரம்பிக்கப்படும் திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு செல்லிடத் தொலைபேசிக் கோபுர அறவீட்டிலிருந்து விலக்களிப்பு வழங்குகின்றது.
- **2026 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம்** — மூலோபாய சூழல் மதிப்பீடுகள், திண்மக்கழிவு முகாமைத்துவம், விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புடைமை, தீங்கு விளைவிக்கும் கழிவுகளுக்கு உரிமமளித்தல், இரசாயன முகாமைத்துவம், மற்றும் தீழ்ப்பாக்கியின் கழிவுநீர்ச்சுமையின் அடிப்படையிலான கழிவுநீர் வெளிவிடுகைக் கட்டணங்கள் என்பவற்றை உள்ளடக்கும் வகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தத்துவங்களை விரிவுபடுத்துகின்றது. மீறுகைகளுக்கான அங்கீகாரங்களை இரத்துச் செய்வதுடன், இடங்களுக்குரிய தடை நீக்க மற்றும் உரிமமளித்தல் தேவைப்பாடுகளையும் வலுப்படுத்துகின்றது. தண்டங்களை (ரூ. 250,000 முதல் 15 மில்லியன் வரையான குற்றப்பணங்கள் மற்றும் மூன்று வருடங்கள் வரையான மறியற்றண்டனை) கணிசமான அளவில் அதிகரிக்கின்றது, பாகம் IVM வின் கீழான தவறுகளை பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாக ஆக்குகின்றது, சூழலின் மீட்டளிப்பிற்குக் கட்டளையிடுவதற்கு நீதிமன்றங்களுக்கு வலுவூட்டுகின்றது, அத்துடன் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள் தங்களது நிறுவனங்களினால் இழைக்கப்படும் தவறுகளுக்கான தனிப்பட்ட பொறுப்பினைக் கொண்டிருத்தலை அறிமுகம் செய்கின்றது.
- **2026 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கப் பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம்** — இலங்கைக்கு வெளியே முழுமையாக அல்லது பகுதியளவில் புரியப்படும் செயல்கள், குற்றவியல் ஆதனத்தின் பயனுறு சொத்தாண்மையை பெறுதல், மற்றும் அத்தகைய ஆதனத்தை மாற்றுதல் ஆகியவற்றை உள்ளடக்குவதற்காக, பணம் தூய்தாக்கல் என்னும் தவறைப் பரந்ததாக ஆக்குகின்றது. அடிப்படைத் தவறுக்கான (predicate offence) முன்னைய குற்றத்தீர்ப்பு ஒன்றிற்கான தேவைப்பாட்டை நீக்குகின்றது அத்துடன், மெய்நிகர் சொத்துகள், இணையவழிக் குற்றங்கள், சுற்றாடல் தவறுகள், மற்றும் ஊழல் ஆகியவை உள்ளடங்கலான 25 வகைகளுக்கு 'சட்டமுறையற்ற செயற்பாட்டை' விரிவாக்குகின்றது. முடக்குதல் மற்றும் இழப்பித்தல் தத்துவங்களை வலுப்படுத்துகின்றது, குற்றச்செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபையுடன் சொத்து முகாமைத்துவத்தை ஒருங்கிணைக்கின்றது, நீதவான் நீதிமன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு விசேட புலனாய்வு உத்திகளை அறிமுகம் செய்கின்றது, குற்றப்பணங்களுக்கான தண்டத்தை ரூ. 5 மில்லியன் வரையும் மறியற்றண்டனையை மூன்று வருடங்கள் வரையும் அதிகரிக்கின்றது, அத்துடன் குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தை சர்வதேச ஒத்துழைப்பிற்கு ஏற்புடையதாக்குகின்றது.

## III. தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள்

### விவசாயம், கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசனம்

- வியட்நாம் கமத்தொழில் விஞ்ஞானக் கழகத்துடன் 2025 இல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் கீழ், துறைசார் பரீட்சித்தல்கள் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கி, நெல் வகைகளின் மரபணு பிளாஸ்மா பொருட்களைப் பரிமாறிக்கொள்ளுதல் மற்றும் அதிக விளைச்சலைத் தரும், உவர்ப்புத்தன்மைக்கு ஈடுகொடுக்கும் அரிசி வகைகளை விருத்தி செய்தல் ஆகியவற்றிற்கான வியட்நாமுடனான கூட்டுக் கருத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (25 மே, 2026)
- இலங்கையின் ஏற்றுமதிகளில் களைகொல்லிகளின் எஞ்சிய அளவு மட்டங்கள் மிகையாகக் காணப்படுகின்றன என்னும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்டறிதல்களுக்கான பதிற்செயற்பாடாக, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படும் புதிய மரக்கறிகள் மற்றும் பழவகைகள் ஆகியவை SLGAP சான்றளிக்கப்பட்ட பண்ணைகள், பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்கள், மற்றும் சான்றளிக்கப்பட்ட பதனிடல் வசதி நிலையங்கள் ஆகியவற்றிலிருந்தே பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்னும் கட்டாயத் தேவைப்பாடு அறிமுகம் செய்யப்பட்டது. (25 மே, 2026)
- வரவுள்ள சிறுபோகத்திற்கான களஞ்சிய வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளல் மற்றும் நெல் கொள்வனவுகளுக்கு நிதியளித்தல் ஆகியவற்றிற்காக, பாதுகாப்புத் தொகையொன்றைத் தக்கவைத்துக் கொண்டு, நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் உள்ள அண்ணளவாக 115,000 மெற்றிக் தொன் நெல் கையிருப்புகளை கேள்விகோரல் நடைமுறையொன்றின் ஊடாக விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (25 மே, 2026)
- உத்தியோகபூர்வ பதவிப் பெயர்களை இற்றைப்படுத்தி, 'ஏற்றுமதிக் கமத்தொழில் பயிர்' என்பதன் வரைவிலக்கணத்தைத் தெளிவுபடுத்தும் 1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஏற்றுமதி கமத்தொழில் மேம்பாட்டுச் சட்டத்திற்கான திருத்தம், வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்காகவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காகவும் அங்கீகரிக்கப்பட்டது. (25 மே, 2026)
- 2026 ஆண்டின் சிறுபோகத்திற்காக, 50 கிலோகிராம் பை ஒன்றிற்கு ரூ. 10,200 என்னும் நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தியாளர் விலையில் (farm-gate price), கமத்தொழில் சேவைக் குழுக்களின் ஊடாக 15,000 மெற்றிக் தொன் மேலதிக யூரியா பசளைக் கொள்வனவிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (மொத்தத் தேவைப்பாடு அண்ணளவாக 75, 000 மெற்றிக் தொன் என்பதுடன் 48,297.87 தொன் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டுள்ளது). (18 மே, 2026)
- நில்வளா கங்கை உவர்நீர் தடுப்பணை நிர்மாணத்தின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த நெல் விவசாயிகளுக்கு, ஏழு போகங்களை உள்ளடக்கியதாக (2019 சிறுபோகம் தொடக்கம் 2022 சிறுபோகம் வரை), ஏக்கர் ஒன்றிற்கு ரூ. 40,000 தொடக்கம் ரூ. 64, 102 வரையான வீதங்களில் ரூ. 1,200 மில்லியன் தொகை நட்டஈடு வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (18 மே, 2026)
- வண்டல் படிதல், கட்டமைப்புசார் பலவீனங்கள், மற்றும் காலநிலை மாற்றம் என்பவற்றால் பாதிக்கப்பட்ட சிறிய அளவிலான நீர்ப்பாசன முறைமைகள் மற்றும் வீழ்ச்சி அடுக்கு (எல்லங்க) முறைமைகள் ஆகியவற்றைப் புனரமைப்புச் செய்வதற்காக, 2026 இன் வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 1,000 மில்லியன் தொகையுடன் 'வாரி மஹிம – அபே உருமய' (நீர்ப்பாசனப் பெருமை – எமது மரபுரிமை) நிகழ்ச்சித்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (11 மே, 2026)
- யான் ஓய நீர்த்தேக்கக் கருத்திட்டத்தின் காரணமாக நெற்காணிகளை இழந்த மற்றும் மாற்றுக் நெற்காணிகளை வழங்க முடியாதுள்ள 245 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றிற்கு ரூ. 1,800,000 என்னும் மேலதிக நட்டஈட்டுத் தொகையை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. முன்னைய சுற்றில் 540 குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டிருந்தது. (11 மே, 2026)
- 'விலங்கு' என்னும் வரைவிலக்கணத்தை பசுக்கள் மற்றும் எருமைகள் ஆகியவற்றிற்கு மேலதிகமாக பன்றிகள், ஆடுகள், மற்றும் செம்மறியாடுகளை உள்ளடக்கும் வகையில் நீட்டிப்புச் செய்யும் 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டத்திற்கான

திருத்தம், வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்காகவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காகவும் அங்கீகரிக்கப்பட்டது. (11 மே, 2026)

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி

- 2024 ஆம் ஆண்டின் ஒழுங்குவிதிகளில் காணப்படும் இடைவெளியொன்றை இல்லாமலாக்கும் வகையில், உள்நாட்டு முகவர்களின் ஊடாகத் தொழிற்படும் வெளிநாட்டுப் பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் மத்திய வங்கியுடன் பதிவு செய்வதற்கான தகைமையை விரிவுபடுத்தும் 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர் ஒழுங்குவிதிகளை ஒத்திசைவிற்காகப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் பொருட்டு அங்கீகாரம் வழங்கியது. (25 மே, 2026)
- இலங்கையின் AML/CFT செயற்றிட்டத்தின் பகுதியொன்றாக, ஆசியா முழுவதிலுள்ள காப்புறுதி ஒழுங்குறுத்துநர்களுடன் மேற்பார்வைத் தகவல்களின் பரிமாற்றத்தை இயலச்செய்யும் வகையில், AIA குழுமத்தின் மேற்பார்வைச் சபையின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக ஹொங்கொங் காப்புறுதி அதிகாரசபையுடன் ஒருங்கிணைப்பு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (18 மே, 2026)
- ஆயுதந்தாங்கிய மோதல் இடம்பெற்ற காலப்பகுதியின்போது பயங்கரவாதச் செயல்களின் காரணமாகக் கொல்லப்பட்ட அல்லது அங்கவீனமுற்ற இலங்கைப் பொலிஸ், விசேட அதிரடிப்படை, மற்றும் முப்படைகளின் உறுப்பினர்களின் புதிதாக அடையாளம் காணப்பட்ட தரப்பினருக்கு, தற்போது வழங்கப்படும் கொடுப்பனவுகளைப் பாதிக்காத வகையில், நிவாரணம் வழங்கும் பொதுவான ஒற்றை சுற்றுநிருபம் ஒன்றினை வெளியிடுவதற்கான உத்தியோகத்தர்கள் குழுவின் விதப்புரைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (18 மே, 2026)
- 2026, மே 16 ஆம் திகதிக்குப் பின்னர் திறக்கப்படும் நாணயக் கடிதங்களுக்கு (மற்றும் வாகன இலக்கங்கள், அடையாளம், விபரம், அல்லது தகவுதிறன்கள் தொடர்பில் திருத்தம் செய்யப்பட்ட முன்னைய நாணயக் கடிதங்களுக்கு) ஏற்புடையதாகும் வகையில், 2026, மே 16 ஆம் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பயனுடையதாகும் வகையில், மோட்டார் வாகன இறக்குமதிகளுக்கான 30% சுங்க இறக்குமதித் தீர்வைகளுக்கான 50% மிகை ஒன்றினை விதிக்கும் கட்டளைகளைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (18 மே, 2026)
- வங்கியின் ஆளுகைச் சட்டகத்தைத் தற்போதுள்ள வர்த்தகச் சூழலுடன் நேரொத்ததாக ஆக்குவதற்கும், இலாபமீட்டலை மேம்படுத்துவதற்கும் 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரச ஈட்டு, முதலீட்டு வங்கிச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலம் ஒன்றினைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. (11 மே, 2026)
- 74,000 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் அண்ணளவாக 1,700 பணியாட்டொகுதியினருக்கும் சேவை வழங்கும் கற்றல் மற்றும் முகாமைத்துவ முறைமைகளை டிஜிட்டல்மயமாக்கும் பொருட்டு, இரண்டு வருட காலப்பகுதிக்கு (2026 - 2027) ரூ. 476 மில்லியன் என மதிப்பிடப்பட்ட செலவிலான, களனிப் பல்கலைக்கழக டிஜிட்டல் மாற்றக் கருத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (4 மே, 2026)
- உரிமமளித்தல், மேற்பார்வை செய்தல், தீர்த்தல், நிறுவனரீதியான ஆளுகை, வைப்பாளர் பாதுகாப்பு, அங்கீகாரமளிக்கப்படாத வைப்புகளை நிதிக் கம்பனிகள் பொறுப்பேற்றலுக்கு எதிரான அமுலாக்கம் ஆகியவற்றை நிவர்த்தி செய்யும் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தைத் திருத்தும் சட்டமூலம் ஒன்றினைத் தயாரிப்பதற்கு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. (4 மே, 2026)
- அண்ணளவாக 1,170 தொழில்வாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படும் அதி சொகுசு குடியிருப்புக் கோபுரக் கருத்திட்டங்களுக்கான கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த ஆரம்ப வணிகங்களாக பிரைம் மெல்வா போர்ட் சிற்றி (பிரைவேட்) லிமிடட் (127.6 ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) மற்றும் ஹோம் லாண்ட்ஸ் போர்ட் சிற்றி (பிரைவேட்) லிமிடட் (150.0 ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) ஆகியவை பெயர் குறிப்பிடப்பட்டன. (4 மே, 2026)
- ஐந்து வருட காலப்பகுதியில் அண்ணளவாக 14.6 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் என எதிர்வுகூறப்படும் வெளிநாட்டு முதலீடு மற்றும் 650 புதிய தொழில்வாய்ப்புகள் ஆகியவற்றுடன், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம்நிலை வணிகங்களாக தகவல் தொழில்நுட்பம், வழங்கல்கள், ஆலோசனைச் சேவைகள், பொது வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு, அத்துடன் கடல்சார் தொழில்நுட்பம் ஆகிய துறைகளைச் சேர்ந்த ஆறு கம்பனிகள் பெயர் குறிப்பிடப்பட்டன. (4 மே, 2026)

## கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி

- கரும்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் சீனி ஏற்றுமதிகளின் மீதான தங்கியிருத்தலைக் குறைப்பதற்கும் கரும்பு ஆராய்ச்சி நிறுவனம், தேசிய விஞ்ஞான மன்றம், பிரேசில் கூட்டுறவு முகவராண்மை, மற்றும் சாவோ கார்லோஸ் (São Carlos) பெடரல் பல்கலைக்கழகம் ஆகியவற்றை ஈடுபடுத்தி, 36 மாத காலப்பகுதியில் 'இலங்கையின் கரும்புக் கருத்திட்டத்தை' நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை மற்றும் பிரேசிலுக்கு இடையேயான ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (25 மே, 2026)
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் மீதான விகிதசமமற்ற ஒழுங்குறுத்தல் சுமையைக் குறைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் விருத்தி செய்யப்பட்ட தேசிய ஒழுங்குறுத்துகை சீர்திருத்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான மத்திய பொறிமுறையாக சனாதிபதியின் தலைமையிலான தேசிய ஒழுங்குறுத்தல் சீர்திருத்தச் சபை தாபிக்கப்பட்டது. (18 மே, 2026)
- 2030 ஆம் ஆண்டளவில் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிகளிலிருந்து 36 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை ஈட்டுவதை இலக்காகக்கொண்டு, ஏற்றுமதி அபிவிருத்திக்கான உத்தியோகபூர்வ மூலோபாயச் சட்டகமாக 'இலங்கைத் தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம் - 2026 – 2030' அங்கீகரிக்கப்பட்டது. (4 மே, 2026)
- பிராந்திய கைத்தொழில் சேவைகள் குழு மற்றும் அமைச்சின் கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றினால் முன்வைக்கப்பட்ட 16 கருத்திட்ட முன்மொழிவுகளின் மதிப்பீட்டைத் தொடர்ந்து, ஒன்பது பிராந்திய கைத்தொழில் பேட்டைகளைச் சேர்ந்த காணித்துண்டுகள் 35 வருட குத்தகை அடிப்படையில் முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. (4 மே, 2026)

## தொழில்

- அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மையத் தொழிற்பாடுகளில் மனிதவலு முகவராண்மைகளின் தொழிலாளர்களின் ஈடுபாட்டை ஒழுங்குறுத்துவதுடன் சமமான பணிகளுக்கு சமமான சம்பளம் என்னும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கோட்பாட்டுடன் ஒத்திசையும் வகையில் அவர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டவாக்க மறுசீரமைப்புகளை முன்மொழிவதற்குமான நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கு குழுவினை நியமித்தல். (25 மே, 2026)
- இலங்கைத் தொழிலாளர்களுக்கான தொழில் வாய்ப்பினைப் பாதுகாக்கும் அதேவேளை வெளிநாட்டுத் தொழிலாளர்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் ஒழுங்குறுத்தல் ஆகியவற்றிற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட, வெளிப்படைத்தன்மை வாய்ந்த சட்டகம் ஒன்றினைத் தாபிக்கும் தொழிலாளர் குடிவரவுக் கொள்கையின் வரைவு ஒன்றினைத் தயாரிப்பதற்காக தொழில் அமைச்சின் செயலாளரின் தலைமையிலான வழிப்படுத்தும் குழுவிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது (18 மே, 2026)
- 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளம் ஆட்கள், மற்றும் சிறுவர்களைப் பணிக்கமர்த்தல் சட்டத்தின் பிரிவுகள் 7(3), 13(2), மற்றும் 20(அ)(3) ஆகியவற்றின் கீழான நிதித் தண்டத் தொகைகளைப் பத்து மடங்காக, ரூ. 10,000 இலிருந்து ரூ. 100,000 ஆக அதிகரிப்பதற்கான திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கும் அங்கீகரிக்கப்பட்டது. (11 மே, 2026)

## வலுசக்தி

- மின்சார நுகர்வினை உயர்ந்த மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மின் உருவாக்கக் காலப்பகுதிகளை நோக்கியதாக நகர்த்துவதற்கும் நடத்தை சார்ந்த மாற்றத்தின் ஊடாக வலுசக்தியின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் அரசாங்க நிறுவனங்கள், நியதிச்சட்ட அமைப்புகள் ஆகியவற்றில் தனியார் துறை மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக, ‘சுரக்கிமு லங்கா’ தேசிய வலுசக்திப் பாதுகாப்புப் பணிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (25 மே, 2026)

## கல்வி, உயர்கல்வி, மற்றும் தொழிற்கல்வி

- பேர்மிங்ஹம் பல்கலைக்கழகம் உள்ளிட்ட 11 வெளிநாட்டு நிறுவனங்களை ஈடுபடுத்தி, ஐக்கிய இராச்சியத்தின் சுகாதார மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனத்தினால் வழங்கப்படும் ரூ. 173.2 மில்லியன் நிதியளிப்புடன், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை மீதான நான்கு வருடகால உலகளாவிய சுகாதார ஆராய்ச்சிக் குழுக் கருத்திட்டத்தில் இணைந்துகொள்வதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (18 மே, 2026)

## வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு, மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி

- தற்போதுள்ள 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துகள் சட்டத்தின் கீழ் மூலோபாய வழிகாட்டலை வழங்குவதற்கும் தேசிய புலமைச் சொத்துகள் அலுவலகம் மற்றும் உரிய ஏனைய நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கும் விரிவான தேசிய புலமைச் சொத்துக்கள் கொள்கையைத் தயாரித்தல். (18 மே, 2026)
- இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கின் மீதான ரூ.80/கிலோ என்னும் தற்போதுள்ள விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுடன், உற்பத்தியாளர்களின் விலைகளை ஸ்திரப்படுத்தும் பொருட்டு, லங்கா சதொச லிமிடட் விற்பனை நிலையங்களின் ஊடாக விற்பனை செய்வதற்காக நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டத்திலுள்ள உள்ளூர் விவசாயிகளிடமிருந்து (விவசாயி ஒருவரிடமிருந்து 1,000 கிலோகிராம் வரை) உருளைக்கிழங்குகளை நேரடியாகக் கொள்வனவு செய்வதற்கு கூட்டுறவு மொத்த நிறுவனத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (18 மே, 2026)
- அதிகாரசபையின் மீள்கட்டமைப்பை நிவர்த்தி செய்யும் வகையில், 2003 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்தும் சட்டமூலம் ஒன்றின் தயாரிப்பை துரிதப்படுத்துமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. (4 மே, 2026)

## விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்

- சர்வதேச ஒத்துழைப்பை முறைசார்ந்ததாக்கல், உலகளாவிய விண்வெளி ஆளுகையில் இலங்கையின் வகிபங்கினை வலுப்படுத்தல், மற்றும் சர்வதேச விண்வெளிக் கடப்பாடுகளுடன் இணங்கிச் செயற்படுவதை உறுதிப்படுத்தல் என்பவற்றை இலக்காகக்கொண்டு, இலங்கைக்கான தேசிய விண்வெளிக் கொள்கை ஒன்றினை உருவாக்குவதற்காக நிபுணர் குழு ஒன்றினை நியமித்தல். (18 மே, 2026)

## வீடமைப்பு, நிர்மாணம், நீர் வழங்கல்

- தொழிற்பாட்டுச் செலவுகளை உள்ளடக்குவதற்குத் தற்போதுள்ள தீர்வைகள் போதுமானவை என்பதை உறுதிப்படுத்தும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு, 2026 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கு தற்போதுள்ள நீர்க் கட்டணங்களை திருத்தமின்றிப் பேணுதல் (18 மே, 2026)
- ஆசிய அபிவிருத்தியின் நிதியளிப்பின் கீழ் (மொத்த செலவான 250 மில்லியன் ஐ.அ டொலர்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால், 200 மில்லியன் நிதியளிப்பு செய்யப்படுகின்றது) மேல் மாகாணம் மற்றும் யாழ்ப்பாணத்தில் நீர் சுத்திகரிப்பு, வழங்கல், வருமானம் ஈட்டாத நீர் முகாமைத்துவம் மற்றும் கழிவுநீர் உள்ளடங்கலாக ஐந்து உப கருத்திட்டங்களை உள்ளடக்கிய காலநிலை மீள்திறன் கொண்ட நிலைபேறான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (4 மே, 2026)

## சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகம்

- இலங்கைப் பொலிஸ் மற்றும் கல்வியமைச்சு ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன், ‘கிளீன் ஸ்ரீலங்கா’ நிகழ்ச்சித்திட்டத்திலிருந்தான ரூ. 833 மில்லியன் ஒதுக்கீட்டுடன், சுயாதீனத் தொலைக்காட்சி வலையமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படும் ‘Take Care – Surakemu Magathota’ வீதிப் பாதுகாப்பு கருத்திட்டத்தை வருடமொன்றிற்கு 60 பாடசாலைகளிலிருந்து 100 பாடசாலைகளுக்கு விரிவாக்கம் செய்து, 2026 – 2028 காலப்பகுதியில் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது். (18 மே, 2026)
- ‘கிளீன் ஸ்ரீலங்கா’ நிகழ்ச்சித்திட்டத்திலிருந்தான ரூ. 600 மில்லியன் ஒதுக்கீட்டுடன், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் போஷாக்கு மற்றும் உணவுப் பாதுகாப்பு பற்றிய ‘ஆரோக்கியமான உணவு - மகிழ்ச்சியான வாழ்க்கை’ தேசிய ஊடகக் கருத்திட்டம் 2026 – 2028 காலப்பகுதியில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (18 மே, 2026)

## வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, மற்றும் சுற்றுலாத்துறை

- வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரின் உத்தியோகபூர்வ விஜயமொன்றின்போது (12–15 மே 2026), பெலாரஸ் குடியரசுடன் விமான சேவைகள் ஒப்பந்தம் அத்துடன் உயர்கல்வி மற்றும் சுகாதார சேவைகள் ஒருங்கிணைப்பு மீதான புரிந்துணர்வு உடன்படிக்கை ஆகியவற்றைக் கைச்சாத்திடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (11 மே, 2026)
- வியட்நாம் சனாதிபதியின் உத்தியோகபூர்வ விஜயத்தின்போது (2026 மே 7 – 8), தகவல் மற்றும் தொடர்பாடல், கலாசார ஒத்துழைப்பு, சமயத்துறை சார்ந்த அபிவிருத்தி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், அத்துடன் பொலிஸ் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (4 மே, 2026)

## புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள்

- இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட 11 தளங்களைக் கொண்ட யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார நிலையம் யாழ்ப்பாண மாநகரசபையிடம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதனை முகாமை செய்வதற்காக நிதியம் ஒன்றினைத் தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது நிதியத்திற்கான வரைவு உறுதி சட்டத்துறைத் தலைமையதிபதியின் தடைநீக்கத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. (11 மே, 2026)

## போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி

- மருதானையிலிருந்து அவிசாவளை வரையிலான களனிவெளிப் புகையிரதப் பாதையின் அபிவிருத்திக்கான காணிகளை சுவீகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் ஏழு பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த பிரதேச செயலர்களால் இச்சுவீகரிப்பு மேற்கொள்ளப்படவுமுள்ளது. (4 மே, 2026)
- நிர்மாணம், திருத்தியமைத்தல், மின்மயமாக்கம், டிஜிட்டல்மயமாக்கம், ஆலோசனைச் சேவைகள், அத்துடன் புகையிரத உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் என்பவற்றின் வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்கி புகையிரதப் போக்குவரத்து உட்கட்டமைப்பு ஒருங்கிணைப்பு மீது ரஷ்யக் கூட்டமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (4 மே, 2026)

## பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள்

- சிறுவர் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் சமவாயத்திற்கு அமைவாக, குடும்பங்களுக்கு ஆதரவளித்தல், குடும்ப அடிப்படையிலான பதிலீட்டுப் பராமரிப்பிற்கு முன்னுரிமையளித்தல், மற்றும் சிறுவர்களுக்கான நிறுவனரீதியான பராமரிப்பை முன்னேற்றகரமாகக் குறைத்தல் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு உறுதிபூண்டு, 'சிறுவர்களுக்கான பராமரிப்பு சீர்திருத்தத்திற்கான உலகளாவிய பட்டயம்' இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (4 மே, 2026)

---

*பொறுப்புத்துறப்பு – இந்த ஆவணம் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையினால் வேண்டப்பட்டவாறாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு சுருக்க விளக்கம் மாத்திரமேயாகும் எவ்வித சட்டப் பகுப்பாய்வையும் இது கொண்டிருக்கவில்லை என்பதுடன் சட்ட ஆலோசனையாக இதன் மீது தங்கியிருத்தலுமாகாது. மேலதிக தகவல்கள், திருத்தங்கள் அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு tegal.lawchambers@gmail.com இனைத் தொடர்பு கொள்ளவும்*